
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 72 - தமிழ்

### புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

முழுப்பதிப்புரிமையுடையது.

# க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022(2023)
## 72 - தமிழ்
## புள்ளி வழங்கும் திட்டம்

### பத்திரம் I

**பகுதி I**

கட்டாய வினாக்கள்

| | | |
|---|---|---|
| வினா 01 | | 24 புள்ளிகள் |
| வினா 02 | | 16 புள்ளிகள் |

**பகுதி II**

| | | |
|---|---|---|
| ஏதேனும் மூன்று வினாக்கள் | 20 x 3 | 60 புள்ளிகள் |
| | | 100 புள்ளிகள் |

### பத்திரம் II

**பகுதி I**

கட்டாய வினாக்கள்

| | | |
|---|---|---|
| வினா 01 | | 20 புள்ளிகள் |
| வினா 02 | | 25 புள்ளிகள் |
| வினா 03 | | 25 புள்ளிகள் |

**பகுதி II**

| | | |
|---|---|---|
| ஏதேனும் இரண்டு வினாக்கள் | 15 x 2 | 30 புள்ளிகள் |
| | மொத்தம் | 100 புள்ளிகள் |

**இறுதிப் புள்ளி கணித்தல்**

| | |
|---|---|
| பத்திரம் I | 100 புள்ளிகள் |
| பத்திரம் II | 100 புள்ளிகள் |
| மொத்தம் | 200 புள்ளிகள் |

இறுதிப் புள்ளி $\left(\frac{100+100}{2}\right)$ = 100 புள்ளிகள்

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022(2023)
## தமிழ் II
## புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள், முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள ஐந்து வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | இலக்கணம் | | | |
| | 01 × 20 | | = 20 புள்ளிகள் | 20 புள்ளிகள் |
| 02. | அ. | சுருக்கம் | = 13 புள்ளிகள் | |
| | ஆ. | விரித்தல் | = 12 புள்ளிகள் | 25 புள்ளிகள் |
| 03. | கட்டுரை | | | |
| | | பொருள் | = 12 புள்ளிகள் | |
| | | மொழிநடை | = 08 புள்ளிகள் | |
| | | அமைப்பு | = 05 புள்ளிகள் | 25 புள்ளிகள் |

### பகுதி II

| | | | |
|---|---|---|---|
| 04. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| 05. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| 06. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| 07. | அ., ஆ., இ., ஈ. | பரீட்சார்த்திகளின் இரண்டு தெரிவுகளுக்கு தலா 07 ½ புள்ளிகள் வீதம் வழங்குக. | 15 புள்ளிகள் |
| 08. | அ. | 10 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | 15 புள்ளிகள் |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது தெளிவான இலக்கத்தில் எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .................................................................................... ✓ $\frac{4}{5}$
....................................................................................
....................................................................................

(ii) .................................................................................... ✓ $\frac{3}{5}$
....................................................................................
....................................................................................

(iii) .................................................................................... ✓ $\frac{3}{5}$
....................................................................................
....................................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த.உ. தர் மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்,
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
இழையணி யானை யியல்தே ரஞ்சி
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் களிறுதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் தாளே.

(i) இச்செய்யுளில் புலவர் வெளியிட விரும்பிய விடயம் யாது என்பதையும் அதனை அவர் எவ்வாறு முன்வைக்கிறார் என்பதையும் எடுத்துக்காட்டுக.

(ii) இச்செய்யுளில் அதியமான் அஞ்சியின் கொடைச்சிறப்பு விளங்குமாற்றைத் துலக்குக.

(iii) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள அணியினை எடுத்துக்காட்டி விளக்குக.

**அ)**

(I) - அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைச் சிறப்பு
- அவனது கொடை நிச்சயமானது எனப் பொருத்தமான உவமைமூலம்

**(04 புள்ளிகள்)**

(II) - ஒருநாள் சென்றாலும் இருநாள் சென்றாலும் பலரோடு பலநாள் சென்றாலும் முதல்நாள் வரவேற்று உபசரித்தது போலவே விருப்புடன் உதவுதல்
- காலம் நீடித்தாலும் நீடிக்கவில்லையாயினும் யானையின் தந்தங்களிடையே வைக்கப்பட்ட கவளம் போல நிச்சயத்தன்மையுடையதாயிருத்தல்.

**(04 புள்ளிகள்)**

(III) உவமையணி:

“களிறுதன் கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே”

உவமானம் : யானையின் கொம்புகளிடையே வைக்கப்பட்ட கவளம் யானையின் வாய்க்குள் செல்வது
உவமேயம் : அதியமான் நெடுமானஞ்சியின் கொடை
பொதுத்தன்மை : நிச்சயத்தன்மை / உறுதிப்பாடு

**(04 புள்ளிகள்)**

(ஆ) கற்காணும் திண்மையான் கரைகாணாக் காதலான்
அற்காணி கண்டனைய அழகமைந்த மேனியான்
மற்காணும் திருநெடுந்தோள் மழைகாணும் மணிநிறத்தாய்
நிற்காணும் உள்ளத்தால் நெறியெதிர்நின் றனனென்றான்

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ii) குகனைப் பற்றி இச்செய்யுளிற் கூறப்பட்டுள்ளவற்றைத் தெளிவுறுத்துக.
(iii) இச்செய்யுளில் இடம்பெறும் உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

ஆ)

(I) கங்கையாற்றின் எதிர்க்கரையில் நின்றிருந்த குகனைப் பற்றிச் சுமந்திரன் பரதனுக்கு கூறும் சந்தர்ப்பம்

**(04 புள்ளிகள்)**

(II) - மலையைப் போன்ற வலிமையுடையவன்
- இராமன்மீது எல்லையற்ற பேரன்பு கொண்டவன்
- இருளைக் கண்டாற் போன்ற அழகு பொருந்திய கரிய மேனியை உடையவன்

**(04 புள்ளிகள்)**

(III)

- "மழை காணும் மணிநிறத்தாய்"
  உவமானம் : மழைமேகம் / கார்மேகம்
  உவமேயம் : பரதனின் அழகிய கரிய மேனி
  பொதுத்தன்மை : நிறம் / கருமை
- "கல் காணும் திண்மையான்"
  உவமானம் : மலை / கல்
  உவமேயம் : குகன்
  பொதுத்தன்மை : வலிமை / உறுதி
- "அல் கண்டு அனைய அழகு அமைந்த மேனியான்"
  உவமானம் : இருள்
  உவமேயம் : குகனின் மேனி
  பொதுத்தன்மை : கருமை / நிறம்

**(04 புள்ளிகள்)**

**[12 + 12 = 24 புள்ளிகள்]**

2. (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) **தொண்டு**

வெம்புமணல் உண்டு மிஞ்சி
வெள்ளம் பெருக்கெடுத்துப்
பம்பும் மழைநீர் பயிரழிவு பண்ணுமென
அஞ்சிக் கமக்காரர்
ஆழியொடும் கூட்டிவிட்ட
குஞ்சி நீரோடை
குறுமணலே வார்ந்திருக்கும்.

பாம்பாய்க் கடல்வரையும்
பாயும் அந்தப் பள்ளத்தில்
சாம்பிக் குருத்தும் சருகான வெள்ளறுகைச்
சப்பி வயிற்றைச் சரிக்கட்டிச் சாய்பொழுதில்
'அப்பாடா' என்று களை ஆறும் பசுவொன்றின்
பக்கத்தில் வந்து பழகுமிரு காக்கைகள்.

வெட்கத்தை விட்டும்
விரைந்து பசுமீதில்
ஏறி இறங்கி இருந்து விளையாட்டில்
ஊறி உணர்ச்சியிலே
ஒற்றுமையைக் காட்டும்.

சுடலையிலே வண்ணார்
சலவை செய்யும் கேணி
வடபால் விழுதூன்றி
வாழும் வடக்கிளையில்
கூடு கட்டும் நோக்குடனே
குச்சுவகை சேகரிக்கப்
பாடுபடுகின்ற அண்டங் காகங்கள் தாமவைகள்.

கொசுக்கள் படை நொய்ங்ங்
குழல் கேட்டுச் சாட்டை
விசுக்கும் பசுவால் தொங்கும் கருங்குழலில்
கட்டாதலைகின்ற காட்டெருமைபோல் பேன்கள்
கிட்டநெருங்கி மயிர்கோதி வாய் ஊறிப் பேன்
குத்துகின்ற காக்கைக் குடும்பம்
பொதுத் தொண்டில்
வைத்திருக்கும் நம்பிக்கை
வாழ்த்தத் தகுந்ததுவே.

அப்பொழுதில் அப்பசுவுக் காத்திரமேன் வந்ததுவோ
சப்பளிந்துபோன வயிற்றைச் சடாரென்று
தூக்கி வால்தூக்கிச் சுழற்றி அண்டங் காக்கைகளைத்
தாக்கியது! கொம்பைத் தரை நோக்கித் தாழ்த்தியது.

காக்கையர் ஏதும்
கதையாமல் வேறு புறம்
நோக்கப் பசுமாடு ஊர்
நோக்கி நடக்கிறது.

தொண்டுக்கு நன்றி
துளியுமற்ற மாடிதென்று
அண்டங் காகங்கள் அறையும் அறமொழியே
உண்மையென எண்ணியதை ஒப்புகையில்....

காகங்கள்
சொண்டுகளைப் பார்த்தேன்
சுருக்கென்ற துள்ளத்தில்
தொண்டுக்குக் கூலியவை
கொண்ட பசுவால் மயிரைக்
கண்டேன் இதென்ன கனம்
தொண்டருங்கள் சொண்டினிலே
என்றேன் சுடலையிலே ஆலமரம் நோக்கியவை
சென்றமர்ந்து கொண்டென்னைப் பார்த்துச் சிரித்தனவே.

(i) இக்கவிதையில் இயற்கை நிகழ்ச்சி ஒன்றைச் சித்திரிப்பதன் ஊடாக, கவிஞர் சமூகத்தை எவ்வாறு விமர்சிக்கிறார் என்பதை விளக்குக.

(ii) "பாம்பாய்க் கடல்வரையும் பாயும் அந்தப் பள்ளம்" எனக் கவிஞர் எதைக் குறிப்பிடுகிறார் என்பதையும் அதை எவ்வாறு விபரிக்கிறார் என்பதையும் தெளிவுபடுத்துக.

(iii) "அண்டங் காகங்கள் அறையும் அறமொழி" என்று கவிஞர் எதைக் கூறுகிறார் என்பதையும், அது உண்மையல்ல என்பதை எவ்வாறு அறிகிறார் என்பதையும் விளக்குக.

(iv) "ஆலமரம் நோக்கியவை சென்றமர்ந்து கொண்டென்னைப் பார்த்துச் சிரித்தனவே" இக்கடைசிவரி இக்கவிதையில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

(I)

- தொண்டு செய்வதாகப் பாசாங்கு செய்து சமூகத்தைச் சுரண்டுபவர்களது போலித்தனத்தை, காகங்கள் பசுவுக்கு பேன் எடுத்து உதவுவதுபோலக் காட்டி, தம் தேவைக்காகப் பசுவின் வால்மயிரை எடுத்துச் செல்வதைக் காட்டுவதனூடாக விமர்சனம் செய்கிறார்.

**(04 புள்ளிகள்)**

(II)

- நீரோடை
  - சிறிய நீரோடை (குஞ்சி நீரோடை)
  - கோடைகாலத்தில் வரண்டு குறுமணல் வார்ந்திருத்தல் (குறுமணலே வார்ந்திருக்கும்)
  - மாரிகாலத்தில் நீர் கடல்வரையும் பாயக்கூடியதாக பாம்பு போல நீண்டிருத்தல் (பாம்பாய் கடல்வரையும் பாயும் அந்தப் பள்ளம்)

**(04 புள்ளிகள்)**

(III)

- "செய்த தொண்டுக்கு நன்றியோடு இருத்தல் வேண்டும்" என்பதே அண்டங்காகங்கள் அறையும் அறமொழி
- அண்டங்காகங்களின் சொண்டில் பசுவின் வால்மயிர்கள் இருப்பதைக் கொண்டு

**(04 புள்ளிகள்)**

(IV)

- சுரண்டுபவர்கள் தந்திரமான முறையில் தொடர்ந்து சுரண்டுவார்கள்
- சுரண்டப்படுபவர்களை அவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள்
- அவர்களை ஏளனமாகவே கருதுவார்கள்

என்பன இந்த வரிகள்மூலம் புலப்படுகின்றன. **(04 புள்ளிகள்)**

**அல்லது**

(ஆ) கிராம வாழ்க்கை என்பது கிராமியமான ஒரு காரியம் அல்ல. ஏதோ வன போஜனத்துக்காகப் போகிறவர்கள், வழக்கமாக உட்காரும் ஸோபாவை இழப்பதால், தமக்குக் கிடைப்பதாகக் கருதிக்கொள்ளும் சுகானுபவம் போன்றதல்ல. 'கிராமத்துக்குப் போங்கள்' என்று உருக்கமான பிரசங்கங்கள் பட்டணத்துக்காரர்களை நெட்டி நெட்டித் தள்ளுகின்றன. சார், "நான் ரிட்டயரானதும் ஏதாவது சுகமா ஒரு கிராமத்திலே போய்க் கழிக்கலாம்னு ப்ளான் போட்டிருக்கேன். நீங்க என்ன நினைக்கிறியள்?" என்கிறார் ஒருவர்.

இருபத்தியைந்து வருஷ உழைப்பால் உடலைக் கெடுத்துக் கொண்டதுடன், நேர்ச்சைக் கடனுக்காகக் கையைக் கும்பிட்டபடி உயரத் தூக்கி சூம்பவைத்துக்கொண்ட பைராகி மாதிரிக் காலை பத்து மணி முதல் மாலை 5 மணி வரை மூளையை ஒரே திசையில் விரட்டி விரட்டி இற்றுப்போக வைத்துக்கொண்ட ஒருவருக்குத் தாம் எரிந்து சாம்பலாக வேண்டிய சுடுகாட்டுக்கும், தம்முடைய மிச்ச வாழ்வுக்கும் இடையில் கிடக்கும் ரேழியாக கிராமம் தென்படுவதில் ஆச்சரியமில்லை. அது அவர் பண்ணிய புண்ணியம். டில்லி சர்க்கார் காரியாலயத்தில் ஒரு மகன், என்ஜினியரிங் கம்பெனியில் ஒரு மகன், ஒரு அட்வகேட் ஜெனரலின் மகனுக்கு சக தர்மிணியாக ஒரு மகள், காலேஜுக்கு ஐம்பது மைல் வேகத்தில் மோட்டார் சைக்கிளில் போவதுதான் மோட்ச சாம்ராஜ்யம் என்று நினைக்கும் சுந்தா. இவ்வாறு ஒருபடியாகத் தமது வாரிஸ் வர்க்கத்தைப் பங்கீடு செய்துவிட்டு, தம்முடைய அஜீரணம், 1936 வருஷ மோட்டார் கார், தொய்ந்துபோன காதில் வைத்து ஊசலாடும் வைரக்கம்மல் மனைவி, விட்டமின் விசாரம், திருக்குறள் உபாசனை ஆகியவற்றுடன் இவர் போய் ஒரு கிராமத்தில் குடியேறுகிறார் என்று வைத்துக்கொள்வோம். பத்திரிகையும், பழக்கூடையும் பட்டணத்திலிருந்து வந்து கொண்டே இருக்கும். ஆறு நிறையத் தண்ணீர் போனாலும் வென்னீரில்தான் குளிப்பார். உடம்புக்குள் உயிர் பெய்வதுபோல தென்றல் இழைந்தாலும் பிளானெஸ் சட்டை போட்டுக்கொண்டு வெள்ளைப் பூண் தடியோடு உலாவ, அதாவது வாக்கிங் போவார். எதிரே உட்காந்திருக்கும் வெட்டியான் கைகட்டி வாய் புதைத்து, "எசமான் புத்தி" என்று சொல்லிக்கொண்டு எழுந்திருப்பான். அவ்வளவுதான் அவர் கிராமத்தில் அனுபவிக்கப் போகிறதும், அனுபவிக்கிறதும். ராவணன், மண்ணோடு பெயர்த்துச் சீதையைத் தூக்கிக்கொண்டு போய், அசோக வனத்தில் சிறை வைத்தானாம். அது நிஜமோ பொய்யோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் சொன்னேனே, இந்த மாஜி உத்தியோக வர்க்கம், அது பட்டணத்தில் கொஞ்சம் பெயர்த்துக்கொண்டு போய், கிராமத்தில் போட்டு, அதன்மேல் உட்கார்ந்துகொண்டுதான் கிராமத்தைப் பார்க்கிறார்கள்; கிராமத்தை அனுபவிக்கிறார்கள். இவர்களுக்குக் கிராமம் தென்படாது; அனுபவத்துக்கும் கிட்டாது. இவர்களது இந்த ராவண கைங்கரியத்துக்குள் அகப்படாத கிராமம் என்பது என்ன என்று கேட்கிறீர்களா? அப்படிக் கேளுங்கள்.

நீங்கள் நெல்லுக் காய்ச்சி மரம் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? உணவு வகைகளில் ஒன்றைக் கொடுக்கும் புல் வகையில் ஒன்றல்லவா என்று தாவர நிபுணர் உறுமுகிறார். ஆமாம். நெல்லுக் காய்ச்சி மரம் என்றால், பட்டணத்துக்காரனைப் பற்றிக் கிராமவாசி செய்யும் கிண்டல் என்று அர்த்தம். உங்கள் மோட்டார் காரை அவன் உன்னிப்பாகப் பார்த்தால், நீர் அவனை உதாசீனமாகப் பார்க்கிறீர் அல்லவா? அதற்கு அவனுடைய பதில் அது.

(i) பட்டணத்து உத்தியோககாரர்கள் ரிட்டயரானதும் மிச்சவாழ்வைக் கிராமத்தில் கழிக்க ஏன் விரும்புகிறார்கள் என்பது பற்றிய ஆசிரியரின் கருத்தைத் தெளிவுபடுத்துக.

(ii) கிராமத்தில் குடியேறும் ஓய்வுபெற்ற உத்தியோக வர்க்கத்தின் பெருமை பற்றியும் அவர்கள் கிராமத்தில் அனுபவிக்கும் வாழ்வு பற்றியும் ஆசிரியர் கூறுவதில் வெளிப்படும் கிண்டலை விளக்குக.

(iii) 'நெல்லுக் காய்ச்சி மரம்' பற்றிய ஆசிரியரின் கருத்தை விளக்குக.

(iv) ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரை வழங்குக.

(I)

- பட்டணத்தில் தொடர்ந்து பல காலம் வேலைசெய்து சலிப்புற்றவர்கள் தமது வாழ்வின் இறுதிக்கட்டத்தைக் கிராமத்தில் மகிழ்ச்சியாகக் கழிக்கலாம் என்ற எண்ணம்.

**(04 புள்ளிகள்)**

(II)

- பெருமை பற்றிய கிண்டல்
  - பிள்ளைகளின் உயர்தரவாழ்க்கை, மோட்டார்கார், வைரக்கம்மல், திருக்குறள் உபாசனை, விட்டமின் விசாரம் முதலாவை பற்றிய விபரிப்பு.
- கிராமத்தில் அனுபவிக்கும் வாழ்வு பற்றிய கிண்டல்
  - பட்டணத்திலிருந்து பழக்கூடை வருதல், வெந்நீரில் குளித்தல், தென்றலை அனுபவிக்காமல் பிளானஸ் சட்டை அணிதல், வெள்ளைப்பூண் தடியோடு உலாவுதல், சாதிப் பெருமைகொள்ளுதல் முதலாவை.
  
  கிராமத்திலிருந்துகொண்டும் பட்டண வாழ்வை அனுபவித்தலை இராவண கைங்கரியம் எனல்

**04 புள்ளிகள்)**

(III)

- பட்டணத்துக்காரனைப் பற்றிக் கிராமவாசி செய்யும் கிண்டல்

**(04 புள்ளிகள்)**

(IV)

- இலகு நடை
- கிண்டல் பாங்கு
- உதாரணம் காட்டி விளக்கல்
- பேச்சு வழக்குப் பிரயோகம்
- பிறமொழிச்சொற் கையாளுகை

**(04 புள்ளிகள்)**

**[04 × 04 = 16 புள்ளிகள்]**

## பகுதி II

**3. திருவள்ளுவர், தெரிந்து செயல்வகை என்னும் அதிகாரத்தில்,**

**(அ) செய்யத்தக்க வினை, அதைச் செய்யும் முறைமை**

**(ஆ) தவிர்க்க வேண்டிய வினை, அதனைத் தவிராதுவிடுவதால் ஏற்படும் தீமை**

**(இ) செய்ய வேண்டியன செய்தல், தவிர்க்க வேண்டியன தவிர்த்தல்**

**(ஈ) வினை செய்வதற்கான வழிமுறை, அதைச் செய்வதற்கான உரிமைப்பாடு**

**என்பன தொடர்பாகக் கூறியுள்ளவற்றைத் தெளிவுறுத்துக.**

அ)

- ஒரு செயலைச் செய்வதாயின் அதனைச் செய்வதால் உண்டாகும் அழிவு, ஆக்கம், பயன் என்பனவற்றை ஆராய்ந்து செய்தல் வேண்டும் (குறள் : 01).

- தக்கவராக இனங்கண்ட சுற்றத்தோடு தானும் ஆராய்ந்து தக்க முடிவெடுத்துச் செய்தல் வேண்டும் (குறள் : 02).

**(04 புள்ளிகள்)**

ஆ)

- - அடையவிருக்கும் செல்வத்தை எதிர்பார்த்து, இருக்கும் செல்வத்தையும் இழக்கும் செயலைச் செய்யக்கூடாது(குறள் : 03).
  - செய்வதால் நன்மை கிடைக்கும் என்ற நிச்சயத்தன்மை இல்லாத வினையைச் செய்தலாகாது(குறள் : 04).
- தக்க முறையில் ஆராயாது மேற்கொள்ளும் செயலால் பகைவர் வலிமை அடைவர் (குறள் : 05).

**(06 புள்ளிகள்)**

இ)

- ஒருவன் செய்யக் கூடாதவற்றைச் செய்தாலும் அழிவான்
- செய்ய வேண்டியவற்றைச் செய்யாதுவிட்டாலும் அழிவான் (குறள் : 06).

**(02 புள்ளிகள்)**

ஈ)

- ஒரு செயலைச் செய்யத் தொடங்குவதற்கு முன்னர் அச்செயலின் விளைவான நன்மை, தீமைகளை ஆராய்ந்து செய்ய வேண்டும். தொடங்கிய பின் ஆராய்வோம் என்று இருப்பது அழிவைத் தரும் (குறள் : 07).
- ஒரு செயலைச் செய்யும்போது உரிய முறையில் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவில்லையாயின் அச்செயலுக்குப் பலரும் துணைநின்றாலும் அந்த முயற்சி வீணாகிவிடும் (குறள் : 08).

- அவரவருடைய குணத்தை அறிந்து அதற்கேற்ப செயற்படவேண்டும். அவ்வாறு செய்யாவிடின் தீமை உண்டாக நேரிடும் (குறள் : 09).

- தகுதியற்ற காரியங்களைச் செய்வதை உலகம் ஏற்றுக்கொள்ளாது. ஆதலால், உலகம் பழிக்காத காரியங்களைச் செய்ய வேண்டும் (குறள் : 10).

**(08 புள்ளிகள்)**

**[04+06+02+08 = 20 புள்ளிகள்]**

4. **கம்பராமாயணம் குகப்படலத்தில்**, இராமன் தங்கிச்சென்ற இடத்தைக் காட்டுமாறு குகனைப் பரதன் வினவியது முதல், நாவாய்களைக் கொணருமாறு குகன் கட்டளையிட்டது வரையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) இராமன் பள்ளிகொண்ட இடத்தைக் கண்டதும் பரதன் அடைந்த துன்பம்

(ஆ) இலக்குவன் பற்றிய பரதனின் அபிப்பிராயம்

(இ) இலக்குவன் பற்றிய குகனின் விவரிப்பு

(ஈ) தன்னைத் தானே வெறுத்துப்பேசும் பரதனின் மனநிலை (20 புள்ளிகள்)

**(அ)**

- பதைபதைத்துத் தரையில் விழுதல்
- துன்பக் கடலில் மூழ்குதல்
- நிலம் நனையும்படியாக கண்ணீர் சிந்துதல்

**(05 புள்ளிகள்)**

**ஆ)**

- இராமன்மீது உண்மையான அன்பு கொண்டவன்.
  - இராமன் காடு சென்ற வேளையில் இராமனுக்குத் துணையாகச் சென்றவன்.
  - சகோதரர்களாகிய எங்களுள் நான் இராமனது துன்பத்துக் காரணமானேன். இலக்குவனோ அத்துன்பத்தைத் துடைப்பதற்குத் துணையாக நின்றான்.
- அவன் இராமன்மீது கொண்ட அன்புக்கு எல்லையில்லை

**(05 புள்ளிகள்)**

**இ)**

- இராமனுக்கு ஏற்பட்ட நிலைமை குறித்துப் பெருங்கவலை கொண்டவன்
- இராமனுக்கும் சீதைக்கும் காவலாக விளங்கியவன்
- இராமனுக்கு ஏற்பட்ட துன்பத்தை நினைந்து கண்கள் நீர் சொரிய நின்றவன்
- இராப்பொழுது முழுவதும் துயிலாது காவல் செய்தவன்

**(05 புள்ளிகள்)**

ஈ)

- இராமனுக்கு நேர்ந்த துன்பம் யாவும் தன்னால் நேர்ந்தனவே என்று கழிவிரக்கப்படல்
- இராமன் காய், கிழங்கு உண்டு புற்படுக்கையில் உறங்கினான் என அறிந்தும் நான் உயிர் துறக்கவில்லை. இப்படியான யான் அரச பதவியும் ஏற்றுவிடக்கூடும் என அஞ்சி வருந்துதல்
- இராமனுடனான தன்னுடைய உறவின் தன்மை குறித்து வருந்தி அதுபற்றி ஏளனம் செய்தல்

**(05 புள்ளிகள்)**

**[05 × 04 = 20 புள்ளிகள்]**

5. இரு துயரங்கள் நாடகத்தில் பின்வருவன வெளிப்படுமாற்றை விளக்குக.
   (அ) மனோகரன் வந்தபோது டொக்றர் கந்தப்பு இருந்த நிலை
   (ஆ) டொக்றர் கந்தப்புவிடம் வந்தபோது மனோகரன் இருந்த நிலை
   (இ) மனைவி தனக்குத் துரோகம் செய்ததை அறிந்த மனோகரன் அவள்மீது கொண்ட கோபம்
   (ஈ) மனைவி மீதான அவனது கோபம் படிப்படியாக, டொக்றர் கந்தப்பு மேலதாக மாறியவாறு

(அ)

- மனம் ஒருநிலையில்லாது படபடப்புடன் இருத்தல்
- துக்கத்தோடு பிணத்தைக் குனிந்து பார்த்து கண்களை மூடித் திறந்துவிட்டு வெளியே வருதல்
- மனோகரன் படபடப்புடன் தனது பிரச்சினை பற்றிப் பேசும்பொழுது கந்தப்பு அதைப் பொருட்படுத்தாது மௌனமாக தலைகுனிந்தபடி நிற்றல்
- தன்னுடன் வரும்படி மீண்டும் மீண்டும் மனோகரன் கூறியவேளை முகத்தில் எவ்வித சலனமுமற்று, சோகத்துடன் பெருமூச்சுவிட்டபடி மேலே பார்த்தல்
- மனோகரன் தன்னுடைய மனைவியின் நோய்நிலை பற்றிக் கூறியவேளையிலும் காதில் வாங்கிக்கொள்ளாதவராய் எவ்வித அசுமாத்தமுமின்றி இருத்தல்

**(05 புள்ளிகள்)**

ஆ)

- மனோகரன் மனைவியின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்பில் கந்தப்புவின் வீட்டிற்குள் வேகமாக நுழைதல்
- கந்தப்பு வீட்டிலிருக்கிறார் என்பதை அறிந்ததும் தன்னுடைய பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற நிலையில் மகிழ்ச்சியடைதல்
- மனைவியை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற நினைப்பில் கந்தப்புவை வரும்படி படபடப்புடன் கேட்டல்
- மனைவியின் நோய் குறித்துப் பயப்படுதல்
- கந்தப்புவின் பிள்ளை இறந்த செய்தி அறிந்து துயரப்படுதல், நெருக்கடியான சூழ்நிலையில் வந்ததற்காக தன்னைத்தானே நொந்துகொள்ளல்
- போன உயிர் போக, இருக்கும் மற்ற உயிரையாவது காப்பாற்ற வரும்படி கந்தப்புவிடம் கெஞ்சியும் விடாப்பிடியாகவும் கேட்டல்

**(05 புள்ளிகள்)**

இ)

- மனைவியின் துரோகத்தனத்தை அறிந்ததும் கோபத்தால் கண்ணாடியை உடைத்தல்
- வருத்தமும் ஆத்திரமும் ஏமாற்றமும் முகத்தில் மாறிமாறித் தோன்றுதல்
- கபடநாடகமாடி அவள் தன்னை ஏமாற்றியதாகக் கூறல், கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்தல்
- கையில் வைத்திருந்த கடிதத்தைக் கீழே வீசி எறிந்து, அருவருப்பான பூச்சியை மிதிப்பது போல அதனை மிதித்தல்
- மாடிப்படிகளில் விரைவாக ஏறிக் கைத்துப்பாக்கியுடன் இறங்கி வந்து மனைவியின் படத்தை வெறித்துப்பார்த்தல்

(05 புள்ளிகள்)

ஈ)

- தனது அவல நிலையை உணராத கந்தப்புவை இரக்கமற்றவராகக் கருதி மிக்க கோபத்துடன் கடும் வார்த்தைகளைப் பிரயோகித்துப் பேசுதல்
- 'வந்ததற்கான காசு' எனக் கூறிக் காசை மேசையில் அடித்து வைத்தல்
- உச்சக்கட்ட கோபத்தில் " டொக்ற்றர் இனி நீங்கள் போகலாம்" எனக் கூறல்
- தான் செல்வதற்கான ஏற்பாடுகள் பற்றிக் கந்தப்பு கேட்ட வேளையில் "ஓ ஒழுங்கு கட்டாயம் செய்யத்தான் வேணும்" எனக் கோபித்துக் கூறல்

(05 புள்ளிகள்)

[05 × 04 = 20 புள்ளிகள்]

**6.** பேராசிரியர் கைலாசபதியின் **மானுடம் தழுவிய கவிஞர்** என்ற கட்டுரையின் அடிப்படையில்,
(அ) பெருங் கவிஞர்களின் இயல்புகள்
(ஆ) வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகியோரின் சிறப்புகள்
(இ) பாரதியார்மீது ஆசிரியருக்குள்ள ஈடுபாடு
என்பன பற்றி விளக்குக

(அ)

- மொழியாற்றல் முதலியவற்றைக் குறைவின்றிப் பெற்றிருப்பர்
- தாம் வாழும் காலத்துச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை அறிந்து அவற்றிற்குப் பரிகாரம் காண முற்படுபவர்கள்
- சொந்த அனுபவங்களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது மனுக்குலத்தின் நிலையினை உணர்ந்து அதனோடு கலந்து எழுதும் ஆற்றல் மிக்கவர்கள்
- உலகப் பொதுமை உணர்வு உடையவர்கள்
- காலத்தைக் கடந்து சிந்தித்துச் செயலாற்றுபவர்கள்
- உலகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற உந்துதல் கொண்டவர்கள்
- மானுடம் கேடின்றி வாழத்தக்க கற்பனை உலகைப் படைப்பவர்கள்

(07 புள்ளிகள்)

ஆ)

வள்ளுவர்

- வள்ளுவரின் குறளடிகளை எடுத்தாளாத தமிழ்ப் புலவர்களே இல்லை என்று கூறுமளவில் சிறப்பு வாய்ந்தவர்.
- வையத்தில் மானுடன் வாழ்வாங்கு வாழ பொதுமை உணர்வோடு வழிகாண முற்பட்டவர்.
- வள்ளுவன் கூறிய அறம் அவன் காலத்து நடைமுறைகளின் திரட்சி அன்று; மனிதன் கடைப்பிடிக்க வேண்டும் என அவன் காண விழைந்த சமூக நெறி

இளங்கோ

- இவர் இயற்றிய சிலப்பதிகாரத்தின் செல்வாக்கு நாட்டார் இலக்கியம் வரை படர்ந்துள்ளது
- அறம், அரசியல், வாழ்க்கை என்பவற்றுக்கிடையேயான தொடர்பை குடிமக்கள் காப்பியம் மூலம் அலசி ஆராய்ந்தவர்

கம்பர்

- ‘கல்வியிற் பெரியன் கம்பன்’ எனப் போற்றும் அளவுக்கு உயர்ந்தவர்
- இராமராச்சியம் என்ற கற்பனைக்கு அடிப்படையான இலட்சியமான அரசு ஒன்றை இலக்கியத்தில் படைத்தவர்
- ‘மானுடம் வென்றதம்மா’ என மானுடத்தை நேசித்தவர்
- இம்மூவருமே தனி ஒரு அரசன், தெய்வம், குலம், சாதி என்ற வரையறைகளைக் கடந்து மனுக்குலம் பற்றிப் பாடினர்.

**(07 புள்ளிகள்)**

இ)

- தமிழிலக்கியப் பரப்பின் பெரும் புலவர் வரிசையிலும் அனைத்திந்திய கவிஞனாகவும் உலகப் பெருங் கவிஞனாகவும் பாரதியார் சிறப்புற்றிருப்பதை எடுத்துரைத்தல்
- பாரதியாரது படைப்புகளை உலகம் அங்கீகரித்திருப்பதைப் போலவே அவரது அபிப்பிராயங்களையும் அடிப்படை உண்மைகளாக உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது என வியந்து கூறுதல்
- மகாகவி எனப் போற்றப்படுதல்
- பாரதியாரின் ஆற்றல்களை விதந்து கூறுவதோடு வள்ளுவர், இளங்கோ, கம்பர் என்ற பெருங்கவிஞர்களின் வரிசையில் அவரையும் இணைத்து நோக்குதல்
- பாரதியார் முப்பெருங் கவிஞர்களையும் பாராட்டியதால் அவர்களுக்குப் பெருமை அதிகரித்துள்ளது எனப் பாரதியாரைச் சிறப்பித்தல்

**(06 புள்ளிகள்)**

**[07+07+06 = 20 புள்ளிகள்]**

7. எனக்கு வயது பதின்மூன்று என்ற சிறுகதையினை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.
(அ) வீட்டுவேலைக்கு அமர்த்தப்படும் சிறுமிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்
(ஆ) சமூக ஏற்றத்தாழ்வை ஆசிரியர் வெளிப்படுத்தும் முறை
(இ) சிறுகதையின் முடிவினூடாக ஆசிரியர் கூறவரும் செய்தி (20 புள்ளிகள்)

(அ)

- வேலைசெய்யும் வீட்டைத் தவிர வெளியுலகை அறிந்துகொள்ள இயலாமை
- சராசரி ஆசாபாசங்களைக்கூட நிறைவேற்ற முடியாமை
- பெற்றோரின் அரவணைப்புக் கிட்டாமை
- தமது எதிர்கால வாழ்வைத் தீர்மானிக்க முடியாமை
- வீட்டிலுள்ள ஆண்களின் விரும்பத்தகாத நடவடிக்கைளுக்கு ஆளாக நேர்கின்றமை
- குறைந்த கூலியில் இயலுமைக்கு அப்பாலான கடும் ஊழியம்
- அடக்குமுறை வாழ்க்கைக்கு ஆளாகின்றமை

(07 புள்ளிகள்)

ஆ)

- உடை, உணவு, வசதிகள், வார்த்தைப் பிரயோகம் முதலானவற்றில் காட்டப்படும் பாரபட்சம்
  - கதைசொல்லியான பிரதான பாத்திரத்தின் மன உணர்வின் ஊடாக வெளிப்படுத்தல்
    ஒரு போத்தலுக்குள் எண்ணெய்யும் தண்ணீரும் பற்றிய விபரிப்பு
    முஸ்லிம்களின் சகோரத்துவ கொள்கை பற்றிய விபரிப்பு
  - எஜமானி பாத்திரத்தின் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தல்
    தனது மகனின் தவறுக்காக ஏழைச்சிறுமியைக் கண்டித்தல்
    வேலைக்கமர்த்தப்பட்ட சிறுமிக்கும் தன் மகளுக்குமிடையே பாரபட்சம் காட்டுதல்

(07 புள்ளிகள்)

இ)

- சுயமாகத் தொழில் புரிவதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்வது சுதந்திர வாழ்வுக்கு வழிவகுக்கும்.

(06 புள்ளிகள்)

[07+07+06 = 20 புள்ளிகள்]

**8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**

(அ) சிலப்பதிகார **ஊர்காண் காதையில்** கோவலனுக்குக் கவுந்தியடிகள் கூறிய **அறிவுரைகள்**

(ஆ) **காரணமாலையில் வெளிப்படும் இறையோனின்** பெருமைகள்

(இ) **மானிடசக்தி** எனும் கவிதையில் மனித சமுதாயத்துக்கு பாரதிதாசன் கூறும் **செய்திகள்**

(ஈ) **ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது** நாவலின் கதை வளர்ச்சியில் தெய்வானை என்ற பாத்திரம் பெறும் முக்கியத்துவம்

(உ) கு. அழகிரிசாமியின் **தியாகம்** என்ற சிறுகதையில் ஷண்முகம்பிள்ளை என்ற பாத்திரத்தின் முக்கியத்துவம்

அ)

- நாம் செய்யும் பாவச்செயல்களின் பயனாக துன்பங்களை அனுபவிக்க நேரிடும்.
- உறுதியற்ற இயல்புடைய மாக்கள், அறிவுடைய பெரியோரின் அறக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாது தீவினையின் வழியே செல்வர்.
- அற நூல்களைக் கற்றுணர்ந்த பெரியவர்கள், தவிர்க்க முடியாத தீவினையின் பயனாகிய துன்பத்தை அனுபவிக்கும் காலத்தில் செயலிழந்து வருந்தமாட்டார்கள்.
- மகளிரைப் பிரிதலால் ஏற்படும் துன்பம், புணர்தல் காரணமாக ஏற்படும் துன்பம், மன்மதன் உண்டாக்கும் துன்பம் என்பன மகளிரைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்பவர்களுக்கே உண்டு.
- பாவவினைகள் உயிர்களைத் தொன்றுதொட்டே தொடர்கின்றன.
- இல்லறத்தில் இருந்த இராமனும் நளனும், தம் மனைவியரைப் பிரிவதற்கு முன்வினைப் பயனே காரணமாகும்.
- துறவிகள் வெறுக்கும் காமத்தை பற்றுக்கோடாக கொண்டு வாழ்பவர்கள், கரைகாண முடியாத துன்பத்தை அடைவர்.

**(10 புள்ளிகள்)**

ஆ)

- சோதி நாயகன்
- அன்னை தந்தை இல்லாதவன்
- ஆதி முதல்வன்
- அளவற்ற பேரருளாளன்
- ககுபத்தைத் தோற்றுவித்தவன்
- வானவர்களால் வழிபடப்படுபவன்
- இப்றாஹிம் நபிக்கு அருள் செய்தவன்
- வானவர்களை ஏவல்கொண்டவன்

**(10 புள்ளிகள்)**

**இ)**

- மானிடத் தன்மையினால்தான் பலரும் உலகை ஆண்டனர்.
- உலகில் ஒவ்வொரு மனிதனும் மானிட சக்தியைப் பெற்றிடின் மானிட சக்தியே வெற்றி பெறும்.
- உலகில் உள்ள அனைத்தும் மானிட சக்திக்கு அடிபணியும்.
- மானிட சக்தியைப் பயன்படுத்தி சமத்துவத்தைப் பேண வேண்டும்.
- எதையும் பகுத்தறிவுடன் நோக்க வேண்டும்.

- மானிட சக்தியே வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படை.
- மானிடத் தன்மையே உயிர்நாடி என்பதை உணர்ந்து செயற்படாதவர் வெறும் ஜடங்களே.
- மனிதன், சகமனிதர் அனைவரையும் மதிக்க வேண்டும். அவ்வாறு மதியாதவனை அவனது உயிரே வெறுக்கும்.

**(10 புள்ளிகள்)**

**ஈ)**

- கதைக்களத்தை விபரிப்பதற்குத் தேவையான பாத்திரங்களில் ஒன்றாக விளங்குதல்
- கதை முழுவதும் வியாபகமான பாத்திரமாக அமைதல்
- குடும்ப உறவுகளை இணைக்கும் பாத்திரமாகச் செயற்படுதல்
- கதையின் பிரதான பாத்திரங்களான தாமோதரமும் சௌந்தரமும் இணைவதற்குப் பக்கபலமாக விளங்குதல்

**(10 புள்ளிகள்)**

**உ)**

- பிரதான பாத்திரமான கதிரேசன் செட்டியாரின் குணவியல்புகளையும் நல்லெண்ணங்களையும் வெளிப்படுத்தும் கருவியாக அமைதல்
    - செட்டியாரின் கடைக்கு அடிக்கடி வருதல்
    - செட்டியாருடன் நட்புடன் சம்பாசித்தல்
    - செட்டியாரின் கடும்போக்கின் நன்னோக்கினை வெளிப்படுத்தல்

10 புள்ளிகள்)

[10 × 02 = 20 புள்ளிகள்]

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022(2023)
## தமிழ் II
## புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள், முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள ஐந்து வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

### பகுதி I

01. **இலக்கணம்**
 $01 \times 20 = 20$ புள்ளிகள் — **20 புள்ளிகள்**

02. அ. சுருக்கம் = 13 புள்ளிகள்
 ஆ. கிரகித்தல் = 12 புள்ளிகள் — **25 புள்ளிகள்**

03. கட்டுரை
 பொருள் = 12 புள்ளிகள்
 மொழிநடை = 08 புள்ளிகள்
 அமைப்பு = 05 புள்ளிகள் — **25 புள்ளிகள்**

### பகுதி II

04. அ. 05 புள்ளிகள்
 ஆ. 05 புள்ளிகள்
 இ. 05 புள்ளிகள் — **15 புள்ளிகள்**

05. அ. 05 புள்ளிகள்
 ஆ. 05 புள்ளிகள்
 இ. 05 புள்ளிகள் — **15 புள்ளிகள்**

06. அ. 05 புள்ளிகள்
 ஆ. 05 புள்ளிகள்
 இ. 05 புள்ளிகள் — **15 புள்ளிகள்**

07. அ. ஆ. இ. ஈ. } பரீட்சார்த்திகளின் இரண்டு தெரிவுகளுக்கு தலா 07 ½ புள்ளிகள் வீதம் வழங்குக. — **15 புள்ளிகள்**

08. அ. 10 புள்ளிகள்
 ஆ. 05 புள்ளிகள் — **15 புள்ளிகள்**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ලකුණු කිරීමේ පටිපාටිය සඳහා පමණි

දෙමළ II
தமிழ் II
Tamil II

**72 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ..................................

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி I இல் முதலாம் வினாவில் இருபது வினாக்கள் தனியாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் இதழ்குவியா உயிர்
(1) உ (2) ஊ (3) ஐ (4) ஒ (5) ஓ (..3..)

1.2 பின்வருவனவற்றுள் ஈரிதழ் வெடிப்பொலி
(1) உ (2) க் (3) ப் (4) ம் (5) வ் (..3..)

1.3 சொல்லின் இடையில் மூன்று மெய்கள் மயங்குமாயின் அவற்றுள் முதலாவதாக அமையத்தக்கது
(1) க் (2) ச் (3) த் (4) ப் (5) ய் (..5..)

1.4 நிலைமொழி ஈற்று மெய் இரட்டித்துப் புணர்ந்தது
(1) மண்ணுக்கு (2) பாலுக்கு (3) பெண்களுக்கு
(4) ஆசிரியருக்கு (5) உலகுக்கு (..1..)

1.5 வேற்றுமையுருபு ஏற்கும்போது வடிவம் மாறாத சொல்
(1) நாங்கள் (2) நீங்கள் (3) அவர்
(4) தாங்கள் (5) நாம் (..3..)

1.6 'இ' என்னும் இறந்தகால இடைநிலை இடம்பெறும் சொல்
(1) வாடின (2) நாடியது (3) ஓடினாய்
(4) தேடினேன் (5) போனேன் (...2...)

1.7 ஆண்பால், பெண்பால் உணர்த்தும் விகுதி பெறாமலே, பொருளால் பால்வேறுபாடு உணர்த்தும் சொல்
(1) நடிகை (2) மாணவி (3) தம்பி
(4) உழவன் (5) அவன் (...3...)

1.8 முன்னிலை ஒருமை வினை விகுதி
(1) அ (2) ஈர்கள் (3) ஓம் (4) ஆய் (5) ஏன் (...4...)

1.9 பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமாக இணைந்து உருவான கூட்டுவினை
(1) கண்டுபிடி (2) உத்தரவிடு (3) தட்டிப்பறி
(4) ஏற்றுக்கொள் (5) விட்டுக்கொடு (...2...)

1.10 பின்வருவனவற்றுள் தொழிற்பெயர் இடம்பெற்ற வாக்கியம்
(1) நேற்று எங்கள் வீட்டுக்கு ஒரு வாகனம் வந்தது.
(2) அதிலிருந்து பலர் இறங்கி வந்தனர்.
(3) வந்த எல்லோரையும் எனக்குத் தெரியாது.
(4) வந்தவர்களுட் சிலர் எனது உறவினர்கள்.
(5) அவர்கள் வந்தது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. (...5...)

1.11 பின்வருவனவற்றுள் வினையடியாகப் பிறந்த ஆக்கப்பெயர்
(1) எழுத்தாளன் (2) அறிவாளி (3) ஏற்றுமதி
(4) ஏவுகணை (5) எழுதுகோல் (...3...)

1.12 'கு' உருபு தகுதிப் பொருளில் இடம்பெற்ற தொடர்
(1) அறிஞர்க்கு அழகு அடக்கம்
(2) வயலுக்கு வடக்கே வாய்க்கால்
(3) பாம்புக்குப் பகை பருந்து
(4) மனதுக்குப் பிடித்த மனிதர்
(5) வீட்டுக்கு வீடு வாசற்படி (...1...)

1.13 பின்வருவனவற்றில் தன்வினையாக மாத்திரம் அமைவது
(1) சாய் (2) நனை (3) ஓடு (4) எரி (5) சேர் (...3...)

1.14 நாளை வரும் கடிதம் நல்ல சேதி தரும். அதனால் நன்மைகள் பலவும் மிகும். இங்கு இடம்பெற்றுள்ள வரும், தரும், மிகும் என்னும் வினைச்சொற்கள் முறையே
(1) பலவின்பால் வினைமுற்று, ஒன்றன்பால் வினைமுற்று, பெயரெச்சம்
(2) பெயரெச்சம், பலவின்பால் வினைமுற்று, ஒன்றன்பால் வினைமுற்று
(3) பெயரெச்சம், ஒன்றன்பால் வினைமுற்று, பலவின்பால் வினைமுற்று
(4) ஒன்றன்பால் வினைமுற்று, பலவின்பால் வினைமுற்று, பெயரெச்சம்
(5) ஒன்றன்பால் வினைமுற்று, பெயரெச்சம், பலவின்பால் வினைமுற்று (...3...)

1.15 பின்வருவனவற்றுள் காரணவினை
(1) படித்தான் (2) பிடித்தான் (3) படிப்பித்தான்
(4) விடிந்தது (5) எழுந்தான் (...3...)

1.16 உம் இடைச்சொல் எச்சப்பொருளில் இடம்பெற்ற தொடர்
(1) களவும் கற்று மற (2) நானும் வருவேன் (3) நல்ல முடிவும் வரலாம்
(4) ஒருவரும் வரவில்லை (5) நாயும் தின்னாது (...2...)

1.17 வினைப்பயனிலையைத் தவிர்த்தாலும், பொருள் குன்றாத வகையில் பெயர்ப்பயனிலை உடைய வாக்கியமாக அமைவது
(1) அவனுக்கு ஊரிலே ஒரு அலுவல் இருந்தது.
(2) அதனால் அவன் ஊருக்குச் சென்றான்.
(3) ஊரிலே பலநாட்கள் தங்கிவிட்டான்.
(4) நேற்றுத்தான் அவன் திரும்பிவந்தான்.
(5) இன்று வேலைக்குச் சென்றுவிட்டான். (..1..)

1.18 முதல் வாக்கியத்தின் பயனிலையாகிய வினைமுற்றை எச்சவினையாக மாற்றுவதன்மூலம் ஒரே வாக்கியமாக்கக்கூடிய வாக்கியங்கள்
(1) அவர் நன்கு படித்த மனிதர் + அவர் திமிர் பிடித்த மனிதர்.
(2) உனக்கு கவிதை பிடிக்குமா? + உனக்கு கதை பிடிக்குமா?
(3) நாங்கள் நேரில் சந்தித்து உரையாடுவோம் + நாங்கள் தொலைபேசிமூலம் உரையாடுவோம்.
(4) அவன் பல்கலைக்கழகம் சென்றான் + அவன் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்றான்.
(5) நான் பள்ளிக்கூடம் சென்றேன் + அவன் பள்ளிக்கூடம் சென்றான். (..4..)

1.19 பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியம்
(1) நீ உள்நாட்டிலா வெளிநாட்டிலா படிக்கப்போகிறாய்?
(2) நீ படிப்பதும் படிக்காதுவிடுவதும் உன்னுடைய சுதந்திரம்.
(3) நாங்கள் மத்தியானம் சோறும் இரவு இடியப்பமும் சாப்பிட்டோம்.
(4) நான் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருப்பதால் உங்களை அடிக்கடி சந்திக்க முடிவதில்லை.
(5) நான் கடைக்குச் சென்று வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிவந்தேன். (..4..)

1.20 கூட்டுவாக்கியமாக இணைக்கும்போது இலக்கணரீதியாகச் சிக்கல் தரக்கூடிய வாக்கியத்தொகுதி
(1) காந்தன் படித்தான் + கமால் படித்தான் + மேரி படித்தாள்.
(2) ஆசிரியர் நூலகத்துக்குச் சென்றார் + மாணவர்கள் நூலகத்துக்குச் சென்றனர்.
(3) காவலாளி வீட்டைக் காவல் காத்தான் + நாய் வீட்டைக் காவல் காத்தது.
(4) நான் கொழும்புக்குச் சென்றேன் + நண்பன் கண்டிக்குச் சென்றான்.
(5) நான் இரண்டு தோசை சாப்பிட்டேன் + நான் ஒரு வடை சாப்பிட்டேன் + நான் ஒரு அப்பம் சாப்பிட்டேன். (..3..)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

❊ பகுதி I இல் உள்ள 2ஆம், 3ஆம் வினாக்களுக்கும்,

❊ பகுதி II இல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

மனிதனது அனுபவ உணர்வு இரு சக்திகளாக வெளிப்படுகின்றது. உற்பத்திக் கருவிகள், கலை வடிவங்கள் என்பவையே அவை. உற்பத்திக் கருவிகள் அவனது புறத்தேவைகளான உணவு, பாதுகாப்பு, உடை, வீடு, நுகர்பண்டங்கள் முதலியனவற்றை ஆக்கி, மேலும் படைக்க உதவுகின்றன. கலை வடிவங்கள் அவனது அக உணர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்து அவனது ஆக்க சக்திக்கு மேலும் உந்துசக்தி அளிக்க உதவுகின்றன.

மனிதனிடம் இயல்பாகவே அனைத்தையும் உண்டாக்கவல்ல படைப்பாற்றல் உள்ளது. இப்படைப்பாற்றல் மூலமே உற்பத்திக் கருவிகளை உருவாக்கி, அவற்றை மேம்படுத்தித் தன் புறநிலைத் தேவைகளுக்கான உற்பத்தி அம்சங்களை அவன் பெருக்குகின்றான். அவ்வாறே தனது அக உணர்வுகளான காதல், நட்பு, ஏக்கம், இரக்கம் முதலியவற்றையும் தனது அனுபவ உணர்வுகளையும் இதே படைப்பாற்றல் மூலமாகவே கலைவடிவங்களாக வெளிக்கொணர்ந்து அவற்றை மிளிரச் செய்கின்றான்.

முன்பு கூறியது போல, உணவு, பாதுகாப்பு முதலிய புறத் தேவைகளுக்காக, உற்பத்திக் கருவிகளைக் கூர்மையாக்கிப் பயன்படுத்திய மனிதன், தன் அக உணர்வுத் தேவைகளை வெளிப்படுத்த பல்வேறு இசைக்கருவிகள் முதலிய கலைப்பொருள்களையும் உண்டாக்கத் தவறவில்லை. கலை வடிவங்களும், நுண் கருவிகளும் வானத்திலிருந்து வந்தவையல்ல. அவையனைத்தும் மனிதனாலேயே பல்வேறு சந்தர்ப்பங்களிலே படைக்கப்பட்டவை.

தோலிசைக் கருவிகளான மத்தளம், உடுக்கு முதலியவை மனிதனது உணவு வேட்டையிலிருந்து பிறந்த கருவிகளே. பானை வனையத் தொடங்கியதும் கடம் எனும் இசைக்கருவி தோன்றியதில் வியப்பில்லை. இசைக்கலை மட்டுமன்று, ஏனைய கலைகளும் இவ்வாறே. ஆதிமனிதன் வேட்டையாடிய வெற்றிக் களிப்பில் ஆட்டக்கலை பிறந்தது. தன் சுற்றாடலில் வாழ்ந்த மிருகம், பறவை, பொருட்களுக்கு முதலில் குறியீட்டு வடிவங்களைத் தந்த மனிதன் பின் காலப்போக்கில் அதை ஓவியக்கலையாக வளர்த்தான். இவ்வாறு மனிதனது உற்பத்தித் திறனோடு ஒட்டியதாகவே அகஉணர்வின் வெளிப்பாடாகிய கலையின் வளர்ச்சியும் அமைந்துவரலாயிற்று.

(அ) சுருக்கம்

- மனிதனது அனுபவ வெளிப்பாடு உற்பத்திக் கருவிகள், கலை வடிவங்கள் என்னும் இரு சக்திகளாக வெளிப்படுகின்றது.
- உற்பத்திக் கருவிகள் மனிதனது புறத்தேவைகளான உணவு, முதலானவற்றையும் கலை வடிவங்கள், அவனது அக உணர்வுத் தேவைகளான காதல், நட்பு முதலானவற்றையும் பூர்த்தி செய்ய உதவுகின்றன.
- மனிதன் தன்னிடம் இயல்பாகவே உள்ள படைப்பாற்றல் மூலமே உற்பத்திக் கருவிகளை உருவாக்கி புறத் தேவைக்கான உற்பத்திகளைப் பெருக்குகிறான; இசைக்கருவிகள் முதலானவற்றை உருவாக்கி கலை வடிவங்களை வெளிக்கொணர்கிறான்.
- மனிதனது உற்பத்தித் திறனோடும் வாழ்க்கை அனுபவங்களோடும் ஒட்டியதாகவே அவனது அக உணர்வின் வெளிப்பாடாகிய கலை வளர்ச்சி அமைந்தது.

- உள்ளடக்கம் 08
- வெளிப்பாட்டுத்திறன் 05

**(08 + 05 = 13 புள்ளிகள்)**

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அசோகன் இந்தியாவில் மட்டுமல்ல, உலகிலேயே பெரிய அரசனாவான். அவன் சந்திரகுப்தனுடைய பேரன்; பேரரசுக்கு உரியவன்.

அசோகன் நல்ல அரசன். அவன் புத்தருடைய கொள்கைகளை முழுமனதோடு கடைப்பிடித்தவன். நாட்டைப் போரால் கைப்பற்றுவதைவிட அன்பினால் கவர்ந்துவிட்டான்.

இப்பொழுதுள்ள ஆந்திர நாடு அக்காலத்தில் கலிங்க நாடாகவிருந்தது. அந்த நாட்டைக் கைப்பற்ற, அசோகனுடைய படைகள் கடுமையாகப் போரிட்டன. அதனால் ஏற்பட்ட உயிர்ச்சேதம், சொத்து நாசத்தைக் கண்டு அசோகன் மிகவும் வருந்தினான். 'கருணை, மாளாத வருத்தம், துன்பம் ஆகியவை என் மனதில் குடிகொண்டு விட்டன' என்றான். அதன் பிறகு, 'என் பேரரசை விரிவுபடுத்தப் போரை ஒருபோதும் கைக்கொள்ள மாட்டேன்' என்று வஞ்சினம் கொண்டான். 'பெரிய வெற்றிகளை எல்லாம் அறமுறையால், அல்லது நன்மை செய்வதால் அடைய முடியும்' என்றான். படை பலத்தின் மூலமே ஓர் அரசன் வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டுவிடும்படி அசோகன், தன் மகனை வேண்டிக் கொண்டான். ஒருவேளை போருக்கு இணங்கித்தான் தீரவேண்டும் என்ற நிலை ஏற்பட்டாலும் கூடப் பொறுமையிலும் பெருந்தன்மையிலுமே மகிழ்ச்சியைக் காணலாம் என்று உபதேசித்தான்.

வழிப்போக்கர்கள் தங்குவதற்காக, ஏராளமான சத்திரங்களை அசோகன் கட்டிவைத்தான். வயதானவர்களுக்கும், நோயாளிகளுக்கும் மருத்துவமனைகள் ஏற்படுத்தினான். பிராணிகளுக்கும்கூட மருத்துவமனை ஏற்படுத்தினான்.

அசோகன் தன்னுடைய புகழ்பெற்ற பதினான்கு கொள்கைகளை அல்லது அறிவிப்புக்களை இரும்புத்தூண்களில் பொறிக்கச் செய்தான். மற்றவைகளைக் குகைகளிலும் பாறைகளிலும் செதுக்கச் செய்தான். அந்தக் கொள்கைகள், பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. அக்காலத்திய மக்களின் மொழி அதுதான். ஆகையால் ஒவ்வொருவரும் எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

அசோகன் இருபத்தைந்து ஆண்டுகள், அரியணையிலிருந்து அரசாட்சி செய்து வந்தான். புத்த திருத்தலங்களான கபிலவஸ்து, சாரநாத், கயா ஆகிய இடங்களுக்கு யாத்திரை சென்றான். காசிக்கு அருகிலுள்ள புத்தர் பிறந்த இடமான லும்பினி வனத்தில், ஒரு தூண் அமைத்தான். இன்றும் அந்தத் தூண் அங்கேயே இருக்கிறது. அதில் 'இங்கே உத்தமர் ஒருவர் பிறந்தார்' என்று பொறிக்கப்பட்டிருக்கிறது.

அசோகன் மொத்தம் நாற்பத்தோராண்டுகள் அரசாட்சி செய்தான். கடைசிக் காலத்தில் அவன் துறவியாக இருந்துகொண்டே நாட்டை ஆண்டான்.

அசோகன் காலத்தில் நாட்டிலிருந்த ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் மிகவும் இன்பமாகவும் மனநிறைவுடனும் வாழ்ந்துவந்தனர். எகிப்து, பாரசீகம், சீனா, இலங்கை, பர்மா, சயாம் இன்னும் உள்ள அயல் நாடுகளுக்கும் அசோகன், நல்லெண்ணச் செய்தி அனுப்பிவைத்தான்.

அசோகனின் மகன் மகிந்தனும், மகள் சங்கமித்திரையும் இலங்கைக்குச் சென்று, புத்தருடைய உபதேசங்களைப் பரப்பினர். சங்கமித்திரை, கயாவிலிருந்து போதி மரத்தின் செடி ஒன்றைப் பொற் கலயத்தில் எடுத்துச் சென்றாள். இந்த மரத்தை இலங்கையில் இன்றும் காணலாம். அது உலகிலேயே பழமையான மரம் என்று சொல்லப்படுகிறது.

(i) பொதுமக்கள் நலன் கருதி அசோகன் மேற்கொண்ட முக்கிய பணிகள் யாவை?

(ii) கருணை, மாளாத வருத்தம், துன்பம் ஆகியவை தன் மனதில் குடிகொண்டுவிட்டதாக அசோகன் வருந்தியது எதைக் கண்டு?

(iii) அதன்பின் அவன் மேற்கொண்ட வஞ்சினம் யாது?

(iv) அசோகன் தனது கொள்கைகளை இரும்புத் தூண்களில் பொறிக்கப் பிராகிருத மொழியைத் தேர்ந்தெடுத்தது ஏன்?

(v) லும்பினி வனத்தில் அமைக்கப்பட்டுள்ள தூணில் 'உத்தமர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் யார்?

(vi) உலகிலேயே பழமைமிக்க மரம் எனப்படும் போதிமரத்தின் செடி இலங்கைக்கு எங்கிருந்து யாரால் கொண்டுவரப்பட்டது?

(ஆ)

I)

- வழிப்போக்கர்களுக்கான சத்திரங்கள் அமைத்தமை
- வயதானவர்களுக்கும் நோயாளர்களுக்கும் பிராணிகளுக்கும் மருத்துவமனைகள் அமைத்தமை

II)

- கலிங்க நாட்டுப் போரின் விளைவாக ஏற்பட்ட உயிர்ச்சேதத்தையும் சொத்து நாசங்களையும் கண்டு

III) "என் பேரரசை விரிவுபடுத்தப் போரை ஒருபோதும் கைக்கொள்ள மாட்டேன்" என்பது.

Iv) - பிராகிருத மொழி அக்காலத்துப் பேசுமொழியாக இருந்தமை

- மக்கள் அதனை எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தமை

v) - புத்தர்

vI) - சங்கமித்திரையால்

- கயாவிலிருந்து

(02 × 06 = 12 புள்ளிகள்)

[13 + 12 = 25 புள்ளிகள்]

3. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பினைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) பொதுப் போக்குவரத்துப் பிரச்சினைகளும் தீர்வுகளும்

(ஆ) பிறர்நலம் பேணுதல்

(இ) தமிழ்க்கவிதை வரலாற்றில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பெறும் முக்கியத்துவம்

(ஈ) இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்

(உ) தமிழில் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

(25 புள்ளிகள்)

(அ) **பொதுப்போக்குவரத்துப் பிரச்சினைகளும் தீர்வுகளும்**

- அறிமுகம் - தலைப்பு தொடர்பான விளக்கம்
- போக்குவரத்துப் பிரச்சினைகள்:
  - போக்குவரத்துக்கான போதிய வாகனங்கள் இன்மை
  - தரக்குறைவான வாகனங்கள்
  - போக்குவரத்து நெரிசலும் நேரவிரயமும்
  - எரிபொருள் தட்டுப்பாடு
  - கட்டண உயர்வு
  - பின்தங்கிய பிரதேசங்களில் போக்குவரத்துக்கான வசதிகள் இன்மை
  - வீதிகளின் சீரற்ற நிலை (பாலங்களின்மை, படகுச்சேவையின்மை)
  - நேரசூசி பின்பற்றப்படாமை
  - வீதி விபத்துகள்
- பிரச்சினைகளுக்கான தீர்வுகள்:
  - வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுதல்
  - பழுதடைந்த வாகனங்கள் உரிய காலத்தில் திருத்தப்படுதல்
  - வீதிகள், பாலங்கள் புனரமைக்கப்படல்
  - பின்தங்கிய இடங்களில் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படல்
  - போக்குவரத்துத் துறையை சரியான நிர்வாகக் கட்டமைப்புக்குக் கொண்டு வருதல்
  - ஊழியர்கள், பாடசாலை மாணவர்களுக்கு விசேட சேவைகள் வழங்கப்படல்

(ஆ) **பிறர் நலம் பேணுதல்**

- அறிமுகம் : தலைப்புப் பற்றிய அறிமுகம்
- சுயநலம் - பொதுநலம் ஓர் ஒப்புநோக்கு
- பிறருக்கான நலன்புரிச் சேவைகள்
  - உணவு, உடை, உறையுள் வழங்குதல்
  - துன்பம் போக்குதல்
  - அனர்த்தங்களின்போது உதவுதல்
  - இலவச கல்விச்சாலைகள் அமைத்தல்
  - நீர்நிலைகள் அமைத்தல்

- அன்ன சத்திரங்கள் அமைத்தல்
- மருத்துவமனைகள் அமைத்தல்
- வீதிகள் அமைத்தல் போன்றன

- பிறர்நலம் பேணிப் பெருமை பெற்றோர்
  - மேரிகியூரி அம்மையார்
  - மகாத்மா காந்தி
  - திரேசா அம்மையார்
  - நெல்சன் மண்டேலா (போன்றோர்)
- பிறர் நலம் பேணுதல் பற்றி இலக்கியங்களில் குறிப்பிடப்படுபவை
- பிறர் நலம் பேணுவதால் ஏற்படும் பயன்கள் - சமூக முன்னேற்றம், ஆத்ம திருப்தி, சகோதரத்துவம் போன்றவை.

**(இ) தமிழ்க் கவிதை வரலாற்றில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பெறும் முக்கியத்துவம்**

- அறிமுகம் : - தமிழ்க் கவிதை வரலாறு பற்றிய குறிப்புகள்
  - பாரதியார் பற்றி சில முக்கிய குறிப்புகள்
- கவிதை வரலாற்றில் பாரதியாரின் முக்கியத்துவம்.
  - நவீன கவிதையின் முன்னோடி
- பாரதி பொருள் மரபில் ஏற்படுத்திய மாற்றங்கள்
  - சமுதாயப் பிரச்சினைகளில் கவனம் கொண்டமை (பெண்விடுதலை, சாதிய வேறுபாடு)
- பாரதி செய்யுள் மரபில் ஏற்படுத்திய மாற்றங்கள்
  - புதிய யாப்பு வகைகள் (சிந்து, தெம்மாங்கு, கண்ணி)
  - இசையோடு பாடக்கூடியவை
- எளிமையான மொழிநடை
- பக்தியைப் புதிய வகையில் வெளிப்படுத்தியமை
- பின்வந்தவர்கள் பாரதியைப் பின்பற்ற முனைந்தமை (பாரதிதாசன், கம்பதாசன், சுத்தானந்த பாரதியார், கவிமணி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மஹாகவி முதலானோர்)

**(ஈ) இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்**

- அறிமுகம் : தலைப்புத் தொடர்பான விளக்கம் (மண், நீர், வளி, காடு, கனியம்)
- இயற்கை வளப் பேணுகையின் முக்கியத்துவம்
- இயற்கை வளங்களுக்குத் தற்போது ஏற்படும் பாதிப்பு
  - காடழிப்பு, மண் அகழ்வு, கடல்வளம் சுரண்டப்படுதல்
- வளங்களைப் பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்
  - வளங்களைப் பாதுகாக்க அரசாங்கம், சமூக அமைப்புகள், மக்கள் ஆற்றவேண்டிய பணிகள்
  - மரநடுகை, சட்டதிட்டங்களை வகுத்தல், விழிப்புணர்வுத் திட்டங்கள், கற்பாறைகளால் கடல்வேலி அமைத்தல், தொழிற்சாலைக் கழிவுகள் கடலை வந்தடையாமல் தடுத்தல்

- வளங்களைப் பாதுகாக்காவிடின் எதிர்கொள்ள நேரிடும் சவால்கள்

(உ) **தமிழில் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்**

- அறிமுகம் : பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு பற்றிய பொதுவான விளக்கம்
- பேச்சுவழக்கு
    - எந்த ஒரு மொழிக்கும் பேச்சு வழக்கே அடிப்படை
    - படித்தவர்கள், படியாதவர்கள் சகலராலும் பேசப்படுவது
    - பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடும் தன்மையுடையது
    - இலக்கிய ஆக்கத்துக்கும் பயன்படுவது (நாட்டுப்பாடல், நாட்டுக்கூத்து, பழமொழிகள், விடுகதைகள், நாட்டார் கதைகள், சிறுகதை, நாவல் போன்றன)
- எழுத்து வழக்கு
    - பிராந்திய எல்லை கடந்த பொதுமையுடையது.
    - விசேட சமூக சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படுவது
    - இலக்கிய ஆக்கத்திற்குப் பெரிதும் பயன்படுவது (சங்க இலக்கியங்கள், நீதி நூல்கள், புராண இதிகாசங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், உரைநடை போன்றவை)

**[12 + 08 + 05 = 25 புள்ளிகள்]**

## பகுதி II

4. (அ) சங்ககால இலக்கியப் போக்கிலிருந்து சங்கமருவியகால இலக்கியப் போக்கு மாறுபடுமாற்றினையும் அதற்கான காரணங்களையும் பரிசீலிக்குக.

(ஆ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை வகைப்படுத்திக் காட்டுக.

(இ) சங்கமருவிய காலத்தை இருண்டகாலம் என்போர், அதற்குக் காட்டும் காரணங்கள் யாவை? அவை ஏற்புடையனவா என்பது குறித்து ஆராய்க.

(அ)

**வேறுபாடு**

- சங்க காலம்
  - பொருள் மரபு - அகம், புறம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம்
  - தனிநிலைச் செய்யுள் மரபு
  - பாவகை - அகவல், வஞ்சி, கலி, பரிபாட்டு
  - மக்களின் வாழ்க்கை முறையை விபரித்தல்
  - சமயச்சார்பின்மை
  - இயற்கைக்கு முதன்மை அளித்தல்
- சங்கமருவிய காலம்
  - பொருள் மரபு - அறத்துக்கு முக்கியத்துவம்
  - தொடர்நிலைச் செய்யுள் மரபு
  - பாவகை - வெண்பா செல்வாக்கு
    - கட்டளைக்கலித்துறை, விருத்தம் முதலான யாப்புகளின் அறிமுகம்
  - புதிய பிரபந்த வடிவங்களின் அறிமுகம் (பதிகம், அந்தாதி, இரட்டைமணிமாலை)
  - மக்கள் வாழ வேண்டிய முறையை விபரித்தல்
  - சமயச்சார்பு

**காரணம்**

- களப்பிரரின் வருகையால் அரசியலில் ஏற்பட்ட குழப்பநிலை
- அவைதிக மதங்களின் செல்வாக்கு
- பிற்காலத்தில் சைவ, வைணவ மதங்களின் எழுச்சி
- வடமொழித் தாக்கம்

**(05 புள்ளிகள்)**

ஆ)

- அற நூல்கள்
  - திருக்குறள்
  - நாலடியார்
  - நான்மணிக்கடிகை
  - இன்னா நாற்பது
  - இனியவை நாற்பது
  - திரிகடுகம்

- ஆசாரக்கோவை
- பழமொழி நானூறு
- சிறுபஞ்சமூலம்
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி

• அகத்திணை நூல்கள்
- கார்நாற்பது
- ஐந்திணை ஐம்பது
- ஐந்திணை எழுபது
- திணைமொழி ஐம்பது
- திணைமாலை நூற்றைம்பது
- கைந்நிலை

• புறத்திணை நூல்
- களவழி நாற்பது

**(05 புள்ளிகள்)**

(இ)

• அரசியல்நிலையை அடிப்படையாகக் கொண்டு சங்கமருவிய காலத்தை இருண்ட காலம் என்பர்.

தமிழரசின் வலிமை குன்றிய காலத்தில் களப்பிரர் என்னும் ஒரு மக்கள் குழுவினர் தமிழ்நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினர். அவர் யாவர்? அவராட்சி எத்தகையது? அதனால் நாடடைந்த பயன் யாது? என்றெல்லாம் திட்டமாகக் கூறமுடியாத நிலை இருப்பதனால் தமிழ்நாட்டின் வரலாற்றில் அவராட்சிக் காலம் இருண்ட காலமாகவே காட்சியளிக்கிறது

• இலக்கிய வரலாற்றைப் பொறுத்த வரையில் இக்காலத்தை இருண்ட காலம் என்பது பொருத்தமற்றது.
- தமிழில் தலைசிறந்த அறநூலாகிய திருக்குறள் உள்ளிட்ட பதினொரு அற இலக்கியங்கள்
- சிறந்த காப்பியங்கள் : சிலப்பதிகாரம், மணிமேகலை
- பக்தி இலக்கியங்களின் தோற்றுவாயாக அமையும் காரைக்காலம்மையார் பாடல்கள், முதலாழ்வார் பிரபந்தங்கள்.
- தமிழிலக்கண மரபின் முன்னோடி நூலாக விளங்கும் தொல்காப்பியம் முதலான தலைசிறந்த நூல்கள் தோன்றியது இக்காலத்திலேயே ஆகும்.

**(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

**5. (அ) பல்லவர்கால பக்தி இலக்கியங்களின் பொதுவான பண்புகளை எடுத்துரைக்குக.**
**(ஆ) பெரியாழ்வாரின் இலக்கியப் பங்களிப்புக் குறித்து விபரிக்குக.**
**(இ) பல்லவர்கால இலக்கியங்களில் கைக்கிளை மரபு கையாளப்படுமாற்றினை விளக்குக.**

(அ)

- அடியார் இறைவனிடம் கொண்ட பக்தியை - அன்பை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தல்
- அதற்கேற்ற வகையில் நாயகன் - நாயகி, தாய் - சேய் முதலான உறவுநிலைகளில் பாவனை செய்து பாடுதல்
- முன்னிலைப் பரவலாகவோ படர்க்கைப் பரவலாகவோ நெஞ்சொடு கிளத்தலாகவோ அமைதல்
- இறைவனின் தோற்றப்பொலிவு, வல்லமை, அடியார்களிடம் இறைவன் காட்டும் கருணை என்பவற்றை வியந்துரைத்தல், அவற்றுக்கு புராண, இதிகாச செய்திகளைச் சான்றாக கையாள்தல்
- தலச் சிறப்பைப் புகழ்தலும் இயற்கைவளம் முதலானவற்றை வர்ணித்தலும்
- சாதாரண மக்களும் விளங்கத்தக்க வகையில் எளிமையான மொழிநடையில் அமைந்திருத்தல்
- இசையோடு பாடக்கூடியனவாக அமைதல்
- அதற்கேற்ற யாப்புகளில் பாடப்பெறுதல் (விருத்தம், கட்டளைக் கலித்துறை, தாழிசை)
- பெரும்பாலும் பதிக வடிவில் அமைந்திருத்தல்
- பல்வேறு பிரபந்த வடிவங்களைக் கையாள்தல்

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- இயற்பெயர் - விஷ்ணு சித்தர்
- திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி ஆகிய பிரபந்தங்களைப் படைத்தளித்தவர்.
- திருப்பல்லாண்டு
  - திருப்பல்லாண்டு பன்னிரண்டு பாசுரங்களைக் கொண்டது.
  - காலத்தால் முந்திய பல்லாண்டு
- பெரியாழ்வார் திருமொழி
  - 461 பாசுரங்களைக் கொண்டுள்ளது.
  - கண்ணனைக் குழந்தையாகவும் தன்னைக் கண்ணனின் வளர்ப்புத் தாயாகிய யசோதையாகவும் பாவனை செய்து பாடிய பாசுரங்கள்.
  - அம்புலிப் பருவம், சப்பாணிப் பருவம், தளர்நடைப் பருவம் முதலான பருவங்களைப் பாடிய வகையில் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடி

**(05 புள்ளிகள்)**

(இ)

- கைக்கிளை - ஒருதலைக் காதல்
- இறைவன் மேல் அடியவர் கொண்ட ஒருதலையான ஈடுபாட்டோடு இயைபுறுதல்
- தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் பாவனை செய்து பக்தியை வெளிப்படுத்த வாய்ப்பாக அமைதல்
- சங்க இலக்கிய மரபில் கைக்கிளை பெரும்பாலும் ஆண்களுக்கே உரியதாக அமைய, பக்தி இலக்கிய மரபில் பெண்களுக்கு உரியதாக அமைதல்
- அரசர் பெருமை பாடுவதற்கும் உத்தியாகக் கையாளுதல் (முத்தொள்ளாயிரம், நந்திக் கலம்பகம்)
- தூது முதலான பிரபந்தங்களுக்கு அடிப்படையாதல்

(05 புள்ளிகள்)

[05 × 03 = 15 புள்ளிகள்]

6. (அ) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஈழத்துத் தமிழிலக்கியப் போக்கு எவ்வாறிருந்தது என்பதை எடுத்துக் காட்டுக.

(ஆ) அக்காலப் பகுதியில் எழுந்த புராணங்களைப் பற்றிக் கருத்துரை வழங்குக.

(இ) அக்காலத்தெழுந்த பள்ளுப் பிரபந்தங்களை வகைப்படுத்தி அவற்றின் பொதுப் பண்புகளை விளக்குக.

(அ)

- போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கு : ஞானப்பள்ளு, அர்ச்யாகப்பர் அம்மானை
- ஒல்லாந்தர் காலத்தில் புரட்டஸ்தாந்து மதத்தின் செல்வாக்கு : திருச்செல்வர் காவியம், திருச்செல்வர் அம்மானை.
- ஒல்லாந்தர் காலத்தில் இந்து சமய இலக்கியங்கள் கணிசமான அளவில் தோன்றின : ஏகாதசி புராணம், சிவராத்திரி புராணம், குருநாதசுவாமி கிள்ளைவிடு தூது, பஞ்சவன்னத்தூது, கல்வளை அந்தாதி, மறைசை அந்தாதி, புலியூரந்தாதி, வெருகல் சித்திரவேலாயுதர் காதல், பறாளை விநாயகர் பள்ளு முதலியன.
- பிரபுக்கள் புகழ் பாடும் இலக்கியங்கள் : கரவை வேலன் கோவை, தண்டிகைக் கனகராயன் பள்ளு
- சோதிட, வைத்திய, வரலாற்று நூல்கள் :
  - சோதிட நூல் : சந்தான தீபிகை
  - வைத்திய நூல் : அமுதாகரம்
  - வரலாற்று நூல் : யாழ்ப்பாண வைபவமாலை

(05 புள்ளிகள்)

(ஆ)

- ஞானானந்த புராணம்
    - தொம்பிலிப்பு இயற்றினார்.
    - கிறிஸ்தவ மத விளக்கமாக அமைந்துள்ளது.
    - 1104 விருத்தப்பாக்களை உடையது.
- சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம்
    - வரத பண்டிதர் இயற்றியவை.
    - முறையே சிவராத்திரி விரதம், ஏகாதசி விரதம் ஆகியவற்றின் மகிமையைப் புலப்படுத்துகின்றன.
- யோசேப்புப் புராணம்
    - கூழங்கைத் தம்பிரான் இயற்றியது.
    - இருபத்தொரு காண்டங்களில் 1023 விருத்தங்களைக் கொண்டிருந்தது.
    - இன்று ஐந்து செய்யுட்கள் மாத்திரமே கிடைக்கின்றன.

**(05 புள்ளிகள்)**

(இ)

**வகைப்படுத்தல்**

- கிறிஸ்தவ சமயச் சார்பானது: ஞானப்பள்ளு
- இந்து சமயச் சார்பானது : பறாளை விநாயகர் பள்ளு
- பிரபுத்துவத்தைப் பாடுவது : தண்டிகைக் கனகராயன் பள்ளு

**பொதுப்பண்பு**

- அடிநிலை மக்களைப் பாத்திரங்களாகக் கொண்டவை
- உழவுத் தொழிலோடு தொடர்புடையன.

(05 புள்ளிகள்)

[05 × 03 = 15 புள்ளிகள்]

7. பின்வருவோரில் யாரேனும் இருவர் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

(அ) சி. வை. தாமோதரம்பிள்ளை

(ஆ) சி. வி. வேலுப்பிள்ளை

(இ) கவிஞர் அபதுல் காதர் லெவ்வை

(ஈ) தெணியான் (15 புள்ளிகள்)

**அ) சி.வை. தாமோதரம்பிள்ளை (1832 - 1901)**

- பதிப்பித்த முக்கியமான நூல்கள் :
    - வீரசோழியம்
    - இறையனார் களவியலுரை
    - கலித்தொகை
    - சூளாமணி
    - நீதிநெறி விளக்கம்

- தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை
- தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை
- தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம்
- தொல்காப்பியம் பொருளதிகாரம்

- நூலாக்கம்: சைவ மகத்துவம், நட்சத்திரமாலை, வசன சூளாமணி, கட்டளைக் கலித்துறை
- மூலபாடத் திறனாய்வின் முன்னோடியாக விளங்குதல்
- ஆய்வுபூர்வமான பதிப்புரைகளை வெளியிடல் (வீரசோழியப் பதிப்புரையில் தமிழ் இலக்கிய வரலாற்றை காலங்களாகப் பாகுபடுத்தியுள்ளமை)
- சங்க இலக்கியப் பதிப்புகளுக்கு வழிகாட்டியாக அமைதல் (கலித்தொகைப் பதிப்பு)
- தினவர்த்தமானி பத்திரிகை ஆசிரியராக விளங்கியமை

**ஆ) சி.வி.வேலுப்பிள்ளை (1914 - 1984)**

- எழுத்தாளர், தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி, இதழாசிரியர்.
- மலையக மக்களது பிரச்சினைகளையும் அவலங்களையும் வெளிப்படுத்தியவர்.
- 'மலையகத்துப் பாரதி" எனப் போற்றப்படுபவர்.
- படைப்புகள்
  - தமிழ் நாவல்கள் : இனிப்படமாட்டேன், வீடற்றவன், வாழ்வற்ற வாழ்வு முதலியன
  - நடைச்சித்திரம் : தேயிலைத் தேசம்
  - புனைகதைசாரா இலக்கியம் : நமது கதை அல்லது நாடற்றவர்
  - நாட்டார் பாடல் தொகுப்பு : மலைநாட்டு மக்கள் பாடல்கள்
  - ஆங்கில நெடுங்கவிதை : தேயிலைத் தோட்டத்திலே (மொழிபெயர்ப்பு - சக்தி அ.பாலஅய்யா)
  - ஆங்கில நாவல்கள் : எல்லைப்புறம் முதலியன

**இ) கவிஞர் அப்துல்காதர் லெப்பை (1913 - 1984)**

- படைப்புகள்
  - இக்பால் இதயம்
  - ருபையத் (மொழிபெயர்ப்பு)
  - இரசூல் சதகம்
  - செய்னம்பு நாச்சியார் மான்மியம்
  - பாத்தும்மா சரிதம்
  - காலம் மறவாத கவிதைகள் (கவிதைத் தொகுப்பு)
  - போராட்டச் சிந்தனைகள் (கட்டுரைத் தொகுப்பு)
- செய்னம்பு நாச்சியார் மான்மியம் சிறந்த சமூக அங்கத இலக்கியம்

**ஈ) தெணியான் (1942 - 2022)**

- இயற்பெயர் - கந்தையா நடேசு
- முற்போக்கு எழுத்தாளர்
- சாகித்திய மண்டல பரிசைப் பலமுறை பெற்றவர்.

- பயிற்றப்பட்ட ஆசிரியர்
- ஈடுபட்ட துறைகள் : சிறுகதை, நாவல், விமர்சனம், சிறுவர் இலக்கியம், சஞ்சிகை வெளியீடு முதலியன
- சிறுகதை: சொத்து, மாத்துவேட்டி, இன்னொரு புதிய கோணம், ஒடுக்கப்பட்டவர்கள் (தொகுதிகள்)
- நாவல் : மரக்கொக்கு, குடிமைகள், பொற்சிறையில் வாடும் புனிதர்கள், ஏதனம், கானலில் மான்

[07 1/2 + 07 1/2 = 15 புள்ளிகள்]

**8.** (அ) (i) 'வா' என்ற வினையடியாகப் பிறந்த வினைமுற்று, வினையாலணையும் பெயர் என்பன வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(ii) 'இரு' என்ற சொல் முதல்வினையாகவும் துணைவினையாகவும் வரும் வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(iii) பின்வருவனவற்றுள் வேற்றுமை உருபு ஏற்கும்போது, கட்டாயம் சாரியை பெற்றே புணரும் பெயர்ச்சொற்கள் எவை? அவை அவ்வாறு புணர்வதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

- வீதி, மரம், ஊர், சில

(iv) பின்வரும் சொற்களில் இடம்பெற்றுள்ள எழுத்து வழுவை இனங்கண்டு, வழு அற்ற வகையில் அச்சொற்களைத் திருத்தி எழுதுக.

- பரிட்சயம்
- பேருந்து

(v) பின்வரும் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவற்ற வகையில் இவ்வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

வரலாற்றாசிரியர்கள், இலங்கை பல வளங்களும் நிறைந்தது என்றும் தொன்மையும் தனித்துவமும் உடைய பண்பாட்டைக் கொண்டது என்றும் தங்கள் நூல்களில் எழுதியிருப்பது அவதானிக்கத்தக்கனவாகும்.

(i) வினைமுற்று : அவன் வந்தான்.

வினையாலணையும் பெயர் - வந்தவனை வரவேற்றேன்.

(ii) முதல்வினை : அவன் கதிரையில் இருக்கிறான்.

துணைவினை : நான் ஊருக்கு வரவிருக்கிறேன்.

(iii) மரம் : மரத்தை / மரத்துக்கு / மரத்தால் (அத்து சாரியை)

சில : சிலவற்றை / சிலவற்றுக்கு / சிலவற்றில் (அற்று சாரியை)

(iv) பரிச்சயம் / பரிசயம்

பேருந்து

(V)
- இந்த வாக்கியத்தின் எழுவாய்த் தொடர் ஒருமையில் அமைந்திருக்க பயனிலை பன்மையில் முடிந்துள்ளமை வழுவாகும்.
- வரலாற்றாசிரியர்கள், இலங்கை பல வளங்களும் நிறைந்தது என்றும் தொன்மையும் தனித்துவமும் உடைய பண்பாட்டைக் கொண்டது என்றும் தங்கள் நூல்களில் எழுதியிருப்பது அவதானிக்கத்தக்கதாகும்.

அல்லது

வரலாற்றாசிரியர்கள், இலங்கை பல வளங்களும் நிறைந்தது என்றும் தொன்மையும் தனித்துவமும் உடைய பண்பாட்டைக் கொண்டது என்றும் தங்கள் நூல்களில் எழுதியிருப்பன அவதானிக்கத்தக்கனவாகும்.

**(02 × 05 = 10 புள்ளிகள்)**

**(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றி சிறுகுறிப்பு வரைக.**

**(i) கூட்டுப்பெயர்**

**(ii) இடைநிலை வகைகள்**

**(iii) வியங்கோள் வினைமுற்று**

ஆ.

(i) கூட்டுப் பெயர்

- இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்களின் இணைவால் உருவாகும் பெயர்ச்சொற்கள் கூட்டுப்பெயர் எனப்படும்.

  குருவிக்கூடு, பழச்சாறு, வானொலி, ஏவுகணை
  பல்கலைக்கழகம், மிருகக்காட்சிச்சாலை

- கூட்டுப்பெயர்கள் பெரும்பாலும் இரண்டு வகையில் அமைகின்றன :

  பெயர் + பெயர் = கூட்டுப்பெயர் (குருவி + கூடு = குருவிக்கூடு)
  வினை + பெயர் = கூட்டுப்பெயர் (ஏவு + கணை = ஏவுகணை)

(ii) இடைநிலை வகைகள்

- பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் தோன்றும் ஒரு பகுபத உறுப்பு இடைநிலை ஆகும்.

- இடைநிலை வகைகள்

  பெயர் இடைநிலை
  வினை இடைநிலை
  எதிர்மறை இடைநிலை

- பெயர் இடைநிலை

  ஞ் : அறி + ஞ் + அன் = அறிஞன்
  ச் : வலை + ச் + சி = வலைச்சி

- வினை இடைநிலை

தெரிநிலை வினைப் பகுபதங்களில் வரும் இடைநிலைகள் காலங்காட்டுவனவாய் அமையும். அந்தவகையில், அவை இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்.

இறந்தகால இடைநிலைகள் : த், ட், ற், இன், ன், இ

செய்தான் = செய் + த் + ஆன்
உண்டான் = உண் + ட் + ஆன்
தின்றான் = தின் + ற் + ஆன்
ஓடினான் = ஓடு + இன் + ஆன்
போனான் = போ + ன் +ஆன்
கூடியது = கூடு + இ + அது

நிகழ்கால இடைநிலைகள் : கின்று, கிறு
நடக்கின்றான் = நட + கின்று + ஆன்
நடக்கிறான் = நட + கிறு + ஆன்

எதிர்கால இடைநிலைகள் : ப், வ்
உண்பான் = உண் + ப் + ஆன்
செய்வான் = செய் + வ் + ஆன்

- எதிர்மறை இடைநிலைகள் : இல், அல், ஆ, மாட்டு
நடக்கமாட்டான்

(iii) வியங்கோள் வினைமுற்று

- இருதிணை ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவானதாக கொள்ளப்படுகிறது. எனினும், நடைமுறையில் முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களுக்குரியதாகவே பெரிதும் வழங்கப்படுகிறது.
- வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் ஆகிய பொருள்களில் வழங்கும்.

வாழ்த்தல் - வாழ்க
வைதல் - ஒழிக
வேண்டல் - தருக
விதித்தல் - எழுதுக

- வினையடியுடன் 'க' எனும் விகுதி இணைந்த நிலையிலேயே வியங்கோள் வினைமுற்று பெரும்பாலும் அமைகிறது.

வாழ்க, ஒழிக

- பழந்தமிழில் இய, இயர் ஆகிய விகுதிகளும் அமையப்பெற்றன.

வாழிய, வாழியர்

- தற்காலத்தில் அட்டும் என்னும் வியங்கோள் வினை விகுதியாகப் பயன்படுகிறது.

நீடுழி வாழட்டும்
அராஜகம் ஒழியட்டும்

**(05 புள்ளிகள்)**

[10 + 05 = 15 **புள்ளிகள்**]

***